பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

Your Friends
In Finance
★ SHABRA ★
Temporarily Shifted
To:
Uthayan Office
292/2, Navalar Road,
Jaffna.

உதயன்

விலை ரூபா 3-50

நிதித்துறையில்
உங்கள் நண்பன்
★ ஷப்ரா ★
தற்காலிக முகவரி:
உதயன் பணிமனை
292/2, நாவலர் வீதி,
(கைலாச பிள்ளையார்
கோவிலடி)
யாழ்ப்பாணம்.

சுடர் 5: பிரமோதூத ஆனி 18 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 துல்ஹஃதா பிறை 08 (02-07-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 129

★ தமிழருக்கு எதிராகப் போர் ★ விமானக் குண்டு வீச்சு ★ பொருளாதாரத் தடை ஆகியவற்றை கண்டித்து

நாடாளுமன்றை பகிஷ்கரிக்க ஈரோஸ் எம். பிக்கள் முடிவு

ஜனாதிபதி பிரேமாவுக்கு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

- ★ தமிழர் மீது ஸ்ரீலங்கா படைகள் தொடுத்திருக்கும் போரை கண்டித்தும்—
- ★ தமிழ் மக்களின் குடியிருப்புகள் மீது போர் விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்துவதைக் கண்டித்தும்—
- ★ வடக்கு, கிழக்கு தமிழர் மீது விதிக்கப்பட்டிருக்கும் பொருளாதாரத் தடையைக் கண்டித்தும்—

ஈரோஸ் எம். பி.க்கள் நடாளுமன்றத்தைப் பகிஷ்கரிப்பார்கள்.

பகிஷ்கரிப்பு பற்றிய தங்கள் முடிவை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு இந்த எம். பிக்கள் நேற்று கடிதம்மூலம் அறிவித்தனர்.

ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் எம். இராமலிங்கம், பஷீர் சேகுதாவூத், எட்வேர்ட் செபஸ்தியாம்பிள்ளை, கே. செல்வநாயகம், ரி. புவனசுந்தரராஜா, ஏ. குணசீலன், பஷீர் அமீர், கே. கைலாயபிள்ளை, கே. தில்லைநாதன் ஆகிய ஒன்பது பேரும் கையெழுத்திட்டிருந்தனர்.

எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகும் நாடாளுமன்ற கூட்டத்தொடரிலிருந்து அவர்களது பகிஸ்கரிப்பு ஆரம்பமாகும்.

ஈரோஸ் எம். பிக்கள் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதா

(4-ஆம் பக்கம் பார்க்க)

பலாலி விளங்காவத்தையில் நேற்றுக் காலை மோதல்!

பலாலி இராணுவத்தினர் தாம் பின்வாங்கிச் சென்ற சென்றிக்கு நேற்றுக் காலை மீண்டும் வந்த போது அப்பகுதியில் கடும் மோதல் ஏற்பட்டது.

மயிலிட்டி- கட்டுவன் வீதியில் விளங்காவத்தை என்னும் இடத்தில் அமைந்திருந்த சென்றியை படையினர் கடந்தவாரம் மூடியிருந்தனர்.

அந்த சென்றிக்கு நேற்றுக் காலை 7 மணியளவில் மீண்டும் இராணுவத்தினர் வர முயற்சித்தபோது புலிகளுக்கும் அவர்களுக்கும் இடையில் கடும் மோதல் ஏற்பட்டது. மோதலை அடுத்து படையினர் முகாம் திரும்பினர்.

தொடர்ந்து நேற்றுப் பகல் முழுதும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றைய மோதல் சம்பவத்தின் போது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த காங்கேசு ஆனந்தன் (வயது 28) என்ற விவசாயி தொடையிலும் பழுவிலும் காயமடைந்து மானிப்பாய் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (உ-68-10)

சுப நேரம்

02-7-90

சுபநேரம்!
11-56—01-26
இராகுகாலம்
07-28—08-56

தமிழீழ தேசிய நிதிக்கு குடும்பத்துக்கு 2 பவுண்!

விடுதலைப் புலிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 2

தமிழீழ தேசிய நிதிக்கு ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் குறைந்தது இரண்டு பவுண் தங்கத்தைத் தந்துதவுமாறு விடுதலைப்புலிகள் கோரியிருக்கின்றனர்.

இது தொடர்பாக விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைமைச் செயற்குழு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:—

தமிழீழம், சிங்கள தேசத்திற்கு எதிராகப் போராடுகின்றது. சிங்கள கடற்படை வான்படை, தரைப்படை, காவற்படை மற்றும் சிங்களக் காடையர் படை ஆகியவற்றோடு தமிழீழம் போராடுகின்றது.

ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு படைகளுக்கு ஏற்கனவே பல கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. குறை நிரப்புத் திட்டத்தின் கீழ் மேலும் ஐநூறு கோடி ரூபாவை சிங்கள அரசு பாதுகாப்புச் செலவுக்காக

(3 ஆம் பக்கம் பார்க்க)

இரத்த தானம் செய்க!

யாழ்ப்பாணம், ஜூலை 2

மானிப்பாய் மெமோறியல் ஆஸ்பத்திரியில் இயங்கும் யாழ். போதனா ஆஸ்பத்திரிப் பிரிவுக்கு உடனடியாக இரத்தம் வழங்குமாறு பொது மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் பகுதிகளில் தற்பொழுது பரவலாக இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளினால் காயப்பட்ட நிலையில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்படுவோரின் எண்ணிக்கை தினசரி அதிகரித்து வருகிறது.

இதன் காரணமாக வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்தத்திற்கு பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்காரணமாகவே இரத்ததானம் செய்து காயப்பட்டோரைக் காப்பாற்றுமாறு ஆஸ்பத்திரி நிர்வாகம் பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது. (உ-10)

கொழும்பில் அகதி முகாம்

கொழும்பு, ஜூலை 2

கொழும்பில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவ பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த முகாமில் 400 பேருக்குமேல் தங்கியுள்ளனர். (உ-3)

வங்கி இன்று திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 2

இன்று திங்கட்கிழமை நிலைமை சீராக இருந்தால் காலை 9 மணி முதல் 9.30 மணி வரை இலங்கை வங்கியின் யாழ் ஆஸ்பத்திரி வீதிக் கிளை செயற்படும் என வங்கி முகாமையாளர் தெரிவித்தார்.

காசோலைகள் ஏற்கப்படமாட்டாதுஎன்றும்-

பணக் கொடுக்கல், வாங்கல் மட்டுமே நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

'பெல்' ஹெலிகள், விமானங்கள் இவ்வாரம் கொழும்பு வரும்

கொழும்பு, ஜூலை 2

வடக்கு, கிழக்கில் யுத்தம் புரிவதற்காக இலங்கை அரசு வாங்கவிருக்கும் இரண்டு 'பெல்' ஹெலிக்கொப்டர்களும், ஆறு 'சியானாசெட்டி' குண்டு வீச்சு விமானங்களும் இந்த வாரத்தில் கொழும்பு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

'பெல்' ஹெலிக்கொப்டர்

(4-ஆம் பக்கம் பார்க்க)

கோட்டை முகாமுக்கு

அனுபவமிக்க 2 விமானிகள் உணவு போட முயற்சியாம்

கொழும்பு, ஜூலை 2

யாழ். கோட்டை முகாமில் சிக்கியுள்ள இராணுவம் மற்றும் பொலீஸாருக்கு உணவு விநியோகம் செய்யும் முயற்சியை இலங்கை விமானப் படையைச் சேர்ந்த இரண்டு அனுபவம் மிக்க விமானிகள் மேற்கொண்டிருக்கின்றனராம்.

இவர்கள் கிழக்கு மாகாண போர் முனையில் இருந்து வடக்குக்குச் சென்றிருப்பதாக கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ-எ]

ஈழத் தமிழர் பிரச்சினை:

இந்திய அரசு அசட்டை; ராஜீவ் காந்தி கண்டிக்கிறார்

சென்னை, ஜூலை 2

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசு கடைப்பிடிக்கும் அணுகுமுறையை திரு. ராஜீவ் காந்தியின் தலைமையில் அமைக்கப்பட்ட ஒன்பது பேர் கொண்ட இந்திரா காங்கிரஸ் குழு கண்டித்துள்ளது.

இக் குழு நேற்றுச் சென்னையில் கூடியது.

இலங்கைத் தமிழர்கள் கொலை செய்யப்படுவது, அவர்களின் சொத்துக்களை நாசப்படுத்துவது போன்ற விஷயங்களில் இந்திய மத்திய அரசு அசட்டையாக இருக்கிறது. மத்திய அரசின் அணுகுமுறை கண்டிக்கப்பட வேண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முள்ளிக்குளம் பகுதியில் நேற்று புலிகள் - ராணுவம் கடும் மோதல்

பொம்மர் குண்டு வீச்சில் வீடுகள் பல சேதம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

மன்னார் முள்ளிக்குளத்தில் நேற்று போர்விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின.

முள்ளிக்குளம் பகுதியை நோக்கி முன்னேறி வந்த ஸ்ரீலங்கா இராணுவப் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று கடும் மோதல் நடைபெற்றது.

இந்த மோதலில் பல இராணுவத்தினர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன.

மோதலை அடுத்து இராணுவத்தினருக்கு உதவியாக வந்த போர் விமானங்கள் பெரும் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இந்தத் தாக்குதலில் பல வீடுகள் சேதமுற்றன. பல பொதுமக்கள் உயிரிழந்திருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் தரப்பில் நிஸாம் என்ற போராளி வீரமரணமடைந்தார். (உ)

ஓமந்தை வெறிச்சோடியது; வாகனம் சென்றால் ஹெலி சூடு

யாழ்ப்பாணம், ஜூலை 2

விமானத் தாக்குதல் நடைபெறுவதை அடுத்து ஓமந்தைப் பகுதி மக்களும், வவுனியாவில் இருந்து வந்து தங்கிய அகதிகளும் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

இதனால் ஓமந்தைப் பகுதி சனநடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்படுகிறது. வாகனப் போக்குவரத்துக்களும் இல்லை. திடீரென வாகனத்தைக் கண்டால் ஹெலியில் இருந்து தாக்குதல் நடத்தப்படுகிறது.

இதேவேளை -

பண்டாரிக்குளத்தில் பல வீடுகளும், கூமாங்குளத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான 112 வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

வவுனியா அரச களஞ்சியத்திலிருந்து

உணவுப் பொருள்களை எடுத்து வர சென்றோரை ராணுவம் கலைத்தது!

யாழ்ப்பாணம், ஜூலை 2

வவுனியா நகரில் உள்ள அரசாங்க உணவுக் களஞ்சியத்தில் இருந்து உணவுப் பொருள்களை எடுக்கச் சென்ற பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களை இராணுவத்தினர் துரத்திக் கலைத்தனர்.

இத்தனைக்கும், பிரஸ்தாப உணவுக் களஞ்சியத்திலிருந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

மன்னார் செல்ல முயற்சிக்கும் படையினர் மீது தாக்குதல்கள்

சிப்பாய் ஒருவர் பலி; 27 பேர் காயம்

கொழும்பு, ஜூலை 2

புத்தளம் மாவட்டத்தில் இருந்து மன்னார் மாவட்டம் வரை உள்ள எல்லையை இலங்கை ஆயுதப் படையினர் கடக்க முயன்றபோது விடுதலைப் புலிகள் இரண்டு இடங்களில் தாக்குதல் நடத்தினர்.

பள்ளக்குழி, முகத்துவாரம் ஆகிய இடங்களில் இத்தாக்குதல் இடம்பெற்றது.

இதில் ஒரு சிப்பாய் உயிரிழந்தார். ஒரு அதிகாரி உட்பட 27 சிப்பாய்கள் காயமடைந்தனர்.

— இப்படி கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-எ)

முச்சந்தி முரளி



இவ்வாரம் கொழும்பு வந்து சேர்ந்தவுடன் முதல் வெள்ளோட்டம் யாழ்ப்பாணத்திலோ......?

பொருள்களைவிற்க மறுப்பு; கடைக்குச் 'சீல்' வைப்பு

பருத்தித்துறையில் பிரபல வர்த்தக ஸ்தாபனம் ஒன்று மூடிச் சீல் வைக்கப்பட்டுள்ளது.

பொருள்களை கையிருப்பில் வைத்துக்கொண்டு விற்க மறுத்ததே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடையில் இருந்த பொருள்கள் வெளியில் எடுக்கப்பட்டு காத்து நின்றவர்களுக்கு அவை பங்கீட்டு முறையில் விநியோகிக்கப்பட்டது. (ஒ)

மூடப்பட்ட வைத்தியசாலைகளின்

டாக்டர்கள், ஊழியர்கள்! வேறு ஆஸ்பத்திரிகளுக்கு நாளை பொறுப்பேற்க வேண்டும்

யாழ்ப்பாணம், ஜூலை 2

வவுனியா, முல்லைத்தீவுப் பகுதியில் ஆஸ்பத்திரிகள் பல மூடப்பட்டிருப்பதால் இந்த ஆஸ்பத்திரிகளைச் சேர்ந்த டாக்டர்கள் மற்றும் ஊழியர்கள் தற்போது செயற்படும் வேறு ஆஸ்பத்திரிகளுக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

வவுனியா பிரதேச சுகாதார சேவைக்குப் பொறுப்பான அத்தியட்சகர் டாக்டர் கே. மாணிக்கம் இத் தகவலை தெரிவித்திருக்கிறார்.

அவர் வெளியிட்ட தகவலின்படி-

முல்லைத்தீவு மாவட்ட

[4 ஆம் பக்கம் பார்க்க]

வடபகுதி நோக்கி வந்த பத்திரிகையாளர் மீது சூடு!

யாழ்ப்பாணம், ஜூலை 2

வடபகுதியை நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளரை நோக்கி படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்; எனினும் அவர் காயம் ஏதுமின்றித் தப்பினார். அவரது மோட்டார் சைக்கிள் சேதமுற்றது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் முல்லைத்தீவில் இடம்பெற்றது.

ஹொங்ஹொங்கில் இருந்து வெளிவரும் "சவுத் சைனா மோர்னிங் போஸ்ட்" பத்திரிகையின் செய்தியாளர் கூட்சோர்க் என்பவருக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது.

வடக்கு - கிழக்கு நிலைமை பற்றி நேரில் கண்டு எழுதுவதற்காக கடந்த வெள்ளியன்று மோட்டார் சைக்கிளில் கொழும்பில் இருந்து புறப்பட்ட அவர், அன்று மாலை வவுனியா வந்து சேர்ந்தார். பின்னர் சனிக்கிழமை காலை வவுனியாவிலிருந்து முல்லைத்தீவு வழியாக யாழ்ப்பாணம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

(சின்னஞ்சிறு விளம்பரம்)

தேவை

தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் தெரிந்த பெண்பிள்ளை உடன் தேவை. மானிப்பாய் சங்கானையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும். Fudo Enterprises, Jaffna Road, Manipay. (Shiva Studio, Bitsman, Bank அருகாமையில்.) [சி-4776]

அறிவித்தல்

ஜுபிலி பஜாரில் அமைந்திருந்த டவர் வோச் வேக்ஸ் ஸ்தாபனத்தினரிடம் திருத்துவதற்கு கொடுத்த பொருட்களை சீக்கிரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம். தவறின் பொருட்களுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்ல என்பதனை அறியத் தருகின்றோம் தொடர்பு கோபாலகிருஷ்ணன் 234/4, மானிப்பாய் வீதி, சென் செபஸ்தியார் ஒழுங்கை, (ஓட்டுமடம் சந்திக்கு அருகாமை) யாழ்ப்பாணம்.
[13545]

TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ் – ஆங்கிலம் ரைப்பிங் செய்யவும் நாடுங்கள்: Fudo Jaffna Road, Manipay. (Bitsman, Bank அருகாமையில்.) (சி-4777)

4 வயது சிறுமி காயம்

குருநகர், ஜூலை 2 வெள்ளியன்று ஹெலி சரமாரியாகச் சுட்டதிலும் கொழும்புத்துறை வளன்புரத்தைச் சேர்ந்த நான்கு வயதுச் சிறுமி காயம் அடைந்தார்.

அன்ரன் றொசாந்தி என்னும் இச்சிறுமி யாழ் - கடற்கரை வீதி திருச்சிலுவை சுகநல சேவை நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகிறாள். (இ-51)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திரு. இராமலிங்கம் கந்தையா

(இளைப்பாறிய வ. பி. போ. ச சாலைப்பரிசோதகர், கோண்டாவில்)

மண்ணில்: 30-11-1927
விண்ணில்: 13-07-1989

திதி: 02-07-1990

ஓராண்டு ஆனாலும் தந்தையே உம் நினைவோ
ஓர் நொடிப்பொழுதும் நினைக்காத நாள் இல்லையே
பெற்றெடுத்த செல்வங்கள் எம்மை தவிக்கவிட்டு
பெருவாழ்வு பெற்று விட்டீர் - என்றும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய வணங்குவோமே.

அன்பு மனைவி: திருமதி க. திருஞானசக்தி
அருமைப்பிள்ளைகள்: க மோகனதாஸ்,
க. மோகனறஞ்சினி.

மோகனபவனம்,
பன்னாலை,
தெல்லிப்பழை.

(13539)

சுகாதாரப் பணிப்பாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 2 கிளிநொச்சி மாவட்டத்தில் பணிபுரியும் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல சேவையாளர்கள், சுகாதார தரிசிப்பாளர்கள் மற்றும்அலுவலக ஊழியர்கள் அனைவரையும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பளை அரசினர் ஆஸ்பத்திரியில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ந. கனகசபை இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். (அ)

வடக்கு - கிழக்கு மாணவர்கள்

பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஜூலை2 1989 ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதித் தகுதி பெற்ற வடக்கு-கிழக்கு மாணவர்கள் தமது விண்ணப்பங்களை பல்கலைக்கழக மான்ய ஆணைக் குழுவுக்கு அனுப்ப முடியாத நிலையில் உள்ளனர்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வங்கிகளும், தபாற் கந்தோர்களும் தற்போது செயல் இழந்து உள்ளதே இதற்குக் காரணம்.

இதேவேளை வடக்கில் சுமார் 10 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை ஏற்பதற்கான இறுதித் திகதி ஜூலை மாதம் 14 ஆகும். (இ-10)

8 பேருக்கு ஷெல் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 2 திருகோணமலையில் இருந்து எட்டுப் பேர் ஷெல் காயங்களுடன் முல்லைத்திவுக்கு வந்துள்ளனர்

அவர்களுக்கு முல்லைத்தீவில் வைத்து யாழ் - செஞ்சிலுவைச் சங்க வைத்தியர்கள் உடனடிச் சிகிச்சை அளித்தனர்-

ஆறு பேர் அளம்பில் வைத்தியசாலையில்சிகிச்சைபெற்று வருகிறார்கள்.

இருவர் மானிப்பாய் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். (இ-3)

6 ஆயிரம் குடும்பங்கள் சாவகச்சேரி இடம் பெயர்வு

சாவகச்சேரி, ஜூலை 2 ஷெல், பொம்மர், கடல் பீரங்கி தாக்குதல்களால் இடம் பெயர்ந்த சுமார் 6,000 குடும்பங்கள் சாவகச்சேரிப் பகுதியை வந்தடைந்துள்ளன.

வலிகாமம், யாழ்ப்பாணம், வடமராட்சிப் பகுதிகளில் இருந்து தொடர்ந்தும் மக்கள் வந்தவண்ணமுள்ளனர்.

சில பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் அகதி முகாம்களாக மாறிஉள்ளன. இடம் பெயர்ந்த பலர் உறவினர் நண்பர்கள் வீடுகளில் தங்கி உள்ளனர்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம்பிள்ளையுடன் வந்து அகதிமுகாம்களைப் பார்வையிட்டார். செவ்வாய்க்கிழமை பல. நோ. கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை அடிப்படையில் உணவுப்பொருள்கள் வழங்குவது ஆரம்பமாகியது.

பொது ஸ்தாபனங்கள் சில உணவு, உடை ஆகியனவற்றை வழங்குகின்றன.

உணவுப் பொருள்கள் விநியோகம் கிராமசேவை அலுவலர்களது மேற்பார்வையில் நடைபெறுகிறது. (இ-31)

பரந்தனில் ஒருவர் காயம்

கிளிநொச்சி ஜூலை 2 பரந்தனில் சலியன்று அரச உணவுக்களஞ்சியத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பரந்தனைச் சேர்ந்த கணேஸ் என்னும் இளைஞர் காயம் அடைந்தார். (இ-76)

உண்மையை மறைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை!

அரசாங்கம் இப்படி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 2 மக்களிடமிருந்து உண்மை நிலையை மறைக்கும் நோக்கம் அரசுக்குக் கிடையாது – இப்படி அரசு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

நாட்டின் உண்மைநிலை பற்றி அறிந்துகொள்ளும் உரிமை நாட்டுமக்களுக்கு உண்டு என்று அரசு திடமாக நம்புகிறது.

வடக்கு – கிழக்குப் பகுதிப் பாதுகாப்பு நிலைபற்றி வெகுஜன தொடர்பு சாதனங்கள் மூலம் பாதுகாப்பு அமைச்சு திடமும் அறிக்கை வாயிலாக அறிவித்துவருகிறது

இனங்களுக்கு இடையே உள்ள நல்லுறவைச் சீர்குலைக்க தன்னலமுடையோர் பொய்யான வதந்திகளைப் பரப்பிவருகின்றார்கள்.

இவ்வதந்திகளை நம்ப வேண்டாம். நாட்டைக் காப்பாற்றவேண்டிய இந்த அவசரவேளையில் யாவரும் ஒன்றிணையவேண்டும்.

— இப்படி தகவல் திணைக்களம் மூலம் விடுக்கப்பட்ட அறிக்கையில் அரசு தெரிவித்துள்ளது, [உ-எ)

30 ஆயிரம் ரூபா பேசி கொழும்பு புறப்பட்ட பஸ்

யாழ்ப்பாணத்தில் இருந்து 30ஆயிரம்ரூபா பேசி கொழும்புக்குப் புறப்பட்ட மினிபஸ் ஒன்று மதவாச்சியுடன் திரும்பியது.

மதவாச்சிக்கு அப்பால் செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதி மறுத்ததே இதற்குக் காரணம் ஆகும்.

மினிபஸ் திரும்பியதை அடுத்து கட்டணம் சம்பந்தமாக மினிபஸ்காரருக்கும் பிரயாணிகளுக்கும் இடையில் பிரச்சனை ஏற்பட்டதாம்.

இதனை அடுத்து சாவகச்சேரி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் காரியாலயத்துக்கு மினிபஸ்காரரும் பிரயாணிகளும் அழைத்துச் செல்லப்பட்டனர். [இ-51]

5 ஆம் வகுப்பு

புலமைப் பரிசில் பரீட்சை சான்றிதழ் வழங்க திட்டம்

கொழும்பு ஜூலை 2 ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க கல்வி அமைச்சு முடிவு செய்திருக்கிறது.

இதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கல்வி, உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி உத்தரவு பிறப்பித்திருக்கிறார். (இ-எ)

கடமை ஏற்காத பயிலுநர் ஆசிரியர்

கொழும்பு ஜூலை 2 கடமையை பொறுப்பேற்காத பயிலுநர் ஆசிரியர்களின் இடங்களுக்கு புதியவர்களை நியமிக்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

பயிலுநர் ஆசிரியர் தெரிவு சம்பந்தமான இரண்டாவது பட்டியலில் அதிக புள்ளிகள் பெற்றவர்களில் இருந்து தெரிவு செய்யப்படுபவர்களே இந்த வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவர். (இ-எ)

300 கிராமங்கள் நீரில் மூழ்கின

பிரம்மபுத்திரா நதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பங்களாதேஷில் 300 கிராமங்கள் நீரில் மூழ்கின.

25 பேர் நீரில் மூழ்கி இறந்தனர். சுமார் 16 ஆயிரம் வீடுகள் அள்ளுண்டுபோயின.

முப்பதாயிரம் ஹெக்டேர் நெற்பயிர் நாசமடைந்தது.

ஸாம்பியாவில் சதிமுயற்சி முறியடிப்பு என அறிவிப்பு

ஸாம்பிய அரசாங்கத்தைக் கவிழ்க்க மேற்கொள்ளப்பட்ட சதிமுயற்சி முறியடிக்கப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

இராணுவ அதிகாரி ஒருவர் அரசு வானொலி நிலையத்திற்குச் சென்று 'இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது' -என்று அறிக்கை ஒன்றை வானொலிமூலம் நாட்டுமக்களுக்கு விடுத்தார்.

அதனைத் தொடர்ந்து, அரசுவிசுவாசப் படைகள் வானொலி நிலையத்தைச் சுற்றி வளைத்தது. பின்னர் லெப்டினன்ட் கேர்ணல் தரத்திலான அந்த இராணுவ அதிகாரி கைதுசெய்யப்பட்டார்.

உணவுப்பொருள் விலைகளை அரசு அதிகரித்திருப்பதை எதிர்த்து கடந்தநான்கு [illegible] ஆர்ப்பாட்டங்களில் 25 பேர் உயிரிழந்தனர். (உ-எ)

புல்மோட்டையிலிருந்து இரவு பகல் காட்டு வழியே பயங்கரப் பயணம்

வழிகாட்டிகளின் உதவி இல்லாவிடில் எவரும் தப்பி வந்திருக்க முடியாது

யாழ்ப்பாணம், ஜூலை 2 உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு திருகோணமலையிலிருந்து புறப்பட்ட நாம் 10 தினங்களின் பின் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம். வழிகாட்டிகளின் உதவி எமக்கு கிடைத்திருக்காவிடில் நாம் அங்கேயே அகப்பட்டு உயிராபத்தை சந்திக்க நேரிட்டிருக்கும்.

திருகோணமலையில் கடமையாற்றிய வடக்கு-கிழக்கு மாகாண உத்தியோகத்தர் ஒருவர் மேற்கண்டவாறு சொன்னார். இவர் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவர் தனது பிரயாண அனுபவங்கள் குறித்துஉதயன் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

சென்ற 13 ஆம் திகதி மாலை 5 மணி அளவில் திருகோணமலையில் பயம் கலந்த பரபரப்பு ஏற்பட்டது. மக்கள் நகரை விட்டு வெளியேறத்தொடங்கினர்

இரவு 9 மணி அளவில் உப்புவெளி பொலீஸ் நிலையம், உவர்மலை பொலீஸ் நிலையம், இராணுவ முகாம்கள் ஆகியவற்றில் இருந்து துப்பாக்கிப் வேட்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின.

இதன் பின் மக்கள் வெளியேறுவது அதிகரிக்கவே 14 ஆம் திகதி அதிகாலை உவர்மலையில் உள்ள எனது வீட்டிலிருந்து புறப்பட்டேன் சாம்பல்தீவுக்கு நடந்து சென்று தங்கினேன்.

அங்கும் 17 ஆம் திகதி முதல் ஷெல், விமானத்தாக்குதல் ஆரம்பமாகின.

19 ஆம் திகதி தாக்குதல்கள் மேலும் அதிகரிக்கவே நான் நிலாவெளிக்கு நடந்து சென்றேன்.

அங்கும் ஹெலித் தாக்குதலும், ஷெல் தாக்குதலும் இடம் பெறவே காட்டுப் பாதையால் திரியாய் சென்றேன்.

அங்குள்ள மகாவித்தியாலயத்தில் அப்போது ஏறத்தாழ ஆயிரம் அகதிகள் இருந்தனர்.

அங்கிருந்து முல்லைத்தீவு செல்லும் எண்ணத்துடன் புடைவைக்கட்டு சென்ற போது இராணுவம் படகுச் சேவைக்கு அனுமதி அளிக்கவில்லை

மீண்டும் திரியாய்க்கு

எனவே மீண்டும் திரியாய்க்கு நடந்து சென்றேன். அப்போது 5 000 அகதிகளுக்கு மேல் மகாவித்தியாலயத்தில் இருந்தனர். அங்கிருந்து காடு பற்றி நன்கு அறிந்த வழிகாட்டிகளின் உதவியுடன் முந்நூறு பேர் ஓட்டமும் நடையுமாக காட்டுப் பாதையினூடாக புல்மோட்டையை அடைந்தோம். அங்கிருந்து தொடர்ந்து செல்ல வேண்டிய பாதை மிகவும் கடினமானது. இதனால் எம்மில் திடகாத்திரமானவர்களாக 150 பேரை வழிகாட்டிகள் தேர்ந்தெடுத்தனர். வழிகாட்டிகள் மற்றையோரை வேறு சில வழிகாட்டிகளின் உதவியோடு பட்டிக்குடா துறைக்கு அனுப்பி வைத்தனர்.

பயங்கரமான பயணம்

புல்மோட்டையில் இருந்து இரவு 7 மணி அளவில் எமது உயிருக்கான பயங்கர பயணம் ஆரம்பமானது. இப்பயண ஆரம்பத்தில் நாம் 30 பேர் கொண்ட ஐந்து குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவின் முன்னும், பின்னும் ஒவ்வொரு வழிகாட்டி என்ற அடிப்படையில் எம்மை வழி நடத்தினர்.

அவர்கள் பின்வருவனவற்றை கடைப்பிடிக்கச் செய்தார்கள்.

★ கறுப்புநிற மேலங்கியை அணிதல் அல்லது மேலங்கி அணியாது இருத்தல்.

★ தங்களின் சைகைக்கேற்ப ஓட வேண்டிய இடத்தில் ஒழுங்காக ஓடுதல்.

★ இருக்க வேண்டிய இடத்தில் தாமதியாது இருத்தல்.

★ தவழ்ந்து செல்ல வேண்டிய இடத்தில் தரையுடன் தவழ்ந்து செல்லுதல்.

★ கதைப்பதையோ புகைபிடிப்பதையோ தவிர்த்தல்.

★ தாங்கள் சைகை செய்யாத விடத்து எக்காரணத்தைக் கொண்டும் நிற்பதை தவிர்த்தல்.

வழிகாட்டிகள் எம்மை ஒரு குழுவின் பின்னால் மற்றக் குழு என்ற ஒழுங்கில் புதிய பாதையை ஏற்படுத்தி கூட்டிச் சென்றனர்.

இடைக்கிடை எங்களில் எல்லோரும் வருகிறார்களா என்பதை உறுதிப்படுத்த எம்மை எண்ணிக்கணக்கெடுப்பார்கள். டோர்ச் வெளிச்சத்தை அடித்தும், விசில் அடித்தும் தமக்குள்ளே சமிக்ஞைகளைப் பரிமாறிக் கொள்வார்கள்.

நாம் முட்புதர்கள், உவர் மண் பாதைகள், கைவிடப்பட்டதால் காடாகிவிட்ட வயல்கள், அடர்ந்தகாடுகள் ஆளுயர வளர்ந்து நிற்கும் புற்களைக்கொண்டவெளிகள் என்பவற்றினூடாக இரவோடிரவாக நடசத்திர ஒளியின் உதவியுடன் பல இராணுவ முகாம்களை விலக்கி நடந்து வந்தோம்.

ஒவ்வொரு இராணுவ முகாமையும் விலத்தி வந்த பின் ஒரு சில நிமிடங்கள் இளைப்பாறிய பின் மீண்டும் எமது பயணம் ஆரம்பமாகும்.

வழியில் இராணுவ கவச வாகனம் சென்ற அடையாளத்தை கண்டதால் குறுக்காக காட்டுக்குள்ளால் மிகவும் வேகமாக ஓடி அந்த இடத்தைக் கடந்தோம்.

சேற்று நீர்

வழியில் ஒரு சிறு குட்டையை கண்டதும் தாகம் தாங்காமல் எல்லோரும் அச்சேற்று நீரை பருகினோம் பறையனாறு என்னும் உப்பு நீரோடையை அடைந்து மார்பளவு நீரை நடந்தே கடந்தோம்.

மறுகரைக்கு வந்து மீண்டும் ஓடி, ஓடி காலை 8 மணி அளவில் கொக்கு தொடுவாயை அடைந்தோம் அங்கு எம்மை அவ்வூர் மக்களும் இளைஞர்களும் வரவேற்று தேனீர் தந்து இளைப்பாறச் செய்தனர்.

வழிகாட்டிகள் விடைபெற்றனர்

இத்துடன் எமது உயிர்களை எல்லாம் பாதுகாப்பாக கொண்டு வந்து சேர்த்த வழிகாட்டிகள் எம்மிடம் விடைபெற்றனர். இவ்வுதவியை பணத்துக்காக செய்யவில்லை, மனிதாபிமானஉதவியாகவே செய்தோம் என்று அவர்கள் தெரிவித்தனர். இதுவரை எங்களது பாதுகாப்பில் வந்த நீங்கள் சந்தோசமாக உங்கள் வீடுபோய் சேருங்கள் என்று கூறி வழிகாட்டிகள் விடைபெற்றனர்.

அவர்கள் எமக்குச் செய்த விலை மதிப்பிட முடியாத இப்பெருதவிக்காக நாம் ஆளுக்கு ரூபா 25/- சன்மானமாக கொடுத்தோம்.

அவர்களது அந்த உதவியினால் தான் நாம் உயிர் தப்பி இங்கு வந்து சேர முடிந்தது.

கொக்குதொடுவாயிலிருந்து முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, பரந்தன் ஊடாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம்.

திரியாயில் எம்முடன் சேர்ந்து கொண்ட அகதிகளுடன் ஒரு நாயும் இணைந்து கொண்டது. அந்த நாயும் இறுதியில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து விட்டது.

இப்படி அவர் கூறினார். (இ-மு)

மேற்கு - கிழக்கு ஜேர்மனிகள் பொருளாதார ரீதியில் இணைவு

பொன், ஜூலை 2 மேற்கு ஜேர்மனியும்கிழக்கு ஜேர்மனியும் பொருளாதார ரீதியில் நேற்று முதல் ஒன்றாக இணைந்து கொண்டன.

மேற்கு ஜேர்மனியின் டொய்ஸ் மார்க் நாணயமே ஜூலை முதலாம் திகதி முதல் கிழக்கு ஜேர்மனியின் நாணயமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இரு ஜேர்மனிகளின் எல்லைகளில் போடப்பட்டிருந்த கட்டுப்பாடுகளும் நேற்று முதல் நீக்கப்பட்டன (இ-எ)

லித்து ஏனியாவுக்கு மீண்டும் சோவியத் எரிபொருள்

லித்து ஏனியா மீதான பொருளாதார முற்றுகையை நீக்குவதற்கு மாஸ்கோ அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த சனிக்கிழமை முதல் லித்து ஏனிய மாநிலத்திற்கு எரிபொருள் விநியோகத்தை சோவியத்யூனியன் அரசு மீண்டும் ஆரம்பித்தது.

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து செல்லும் சுதந்திரப் பிரகடனத்தை லித்து ஏனிய நடாளுமன்றம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து பொருளாதார முற்றுகையை மாஸ்கோ அரசு கொண்டு வந்தது.

இப்பிரகடனத்தை நூறு நாட்கள் இடைநிறுத்தி வைத்திருப்பதாக லித்து ஏனியா கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்தது தெரிந்ததே. (இ-எ)

தீவிரவாதிகள் தாக்குதல்

ஐரிஷ் தீவிரவாதிகள் அயர்லாந்தில இரண்டு பொலிஸாரைச் சுட்டுக் கொன்றனர்.

பெல்பாஸ்ற் நகரில் நேற்று இச் சம்பவம் இடம் பெற்றது. ஒரு பொலீஸ்காரர் அந்த இடத்திலேயே மரணமானார். அடுத்தவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானார்.

ஆர்ப்பாட்டம்

காத்மண்டு, ஜூலை 2 நேபாளத்தை மத சார்பற்ற நாடாக பிரகடனப் படுத்துமாறு கோரி தலைநகர் காத்மண்டுவில் சனிக்கிழமை 20 ஆயிரம் பேர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அந்த ஆர்ப்பாட்டத்துக்கு புத்த பிக்குகள் தலைமை வகித்தனர்.

உலகில் உள்ள ஒரே ஒரு இந்து நடு நேபாளம் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (இ-எ)

ஆர்ஜன்ரீனா இத்தாலி நாளை மோதல்

மிலான், ஜூலை 2 பதினான்காவது உலக கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் முதலாவது அரை இறுதி ஆட்டம் நாளை செவ்வாய்க்கிழமை நேப்பிள்ஸ் நகரில் நடைபெறும்.

1986 ஆம் ஆண்டு நடந்த 13 ஆவது உலக கிண்ண உதைபந்தாட்ட சாம்பியனான ஆர்ஜன்ரீனா அணி, இத்தாலி அணியை அன்றைய தினம் எதிர்த்து விளையாடும். (இ-எ,

தேவை

புளொக் தயாரிப்பதற்கான கமரா

புளொக் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படும் கமரா தேவை. விற்பனைக்கு வைத்திருப்போர் உடன் தொடர்பு கொள்ளவும்.

கே. எஸ். ஆர். போட்டோ,
12 'A', கந்தபுராண வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

உதயன்

நனைத்துச் சுமக்கவேண்டாம்!

யுத்த நிலைமை தொடங்குவதற்கு முன்னர், பல்வேறு அலுவல்களின் பொருட்டு கொழும்புக்குச் சென்ற, வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழர்கள், தமது சொந்த இடங்களுக்கு வர முடியாமல் அவஸ்தைப்படுகின்றனர். கொழும்பில் நிரந்தரமாக வசிப்பவர்கள், உத்தியோகத்தின் நிமித்தம் அங்கு தங்குபவர்களை அவஸ்தைப்படுவோர் வகையில் நாம் சேர்த்துக் கொள்ளவில்லை.

இப்போது தங்கி நிற்கும் அகதி முகாம்களிலும், வழியிலும் இன வன்செயல்களுக்கு ஆளாகலாம் என்ற உயிர் அச்சத்துடன் அவர்கள் நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். சிறிது நெஞ்சுரம் மிகுந்தவர்கள், நடப்பது நடக்கட்டும் என்று துணிந்தவர்கள் சிலர் பல கஷ்டங்கள், இன்னல்களை அனுபவித்து ஒரு மாதிரி இங்கு வந்து சேர்ந்துள்ளார்கள்

இப்படியான ஒரு நிலையில், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கும் சிலர் முயற்சித்து வருகிறார்கள். அவ்வாறு முயற்சிப்பவர்கள், வெளிநாட்டில் பணிபுரிந்துவிட்டு, அல்லது வசித்துவிட்டு, லீவில் வந்து இங்கு அகப்பட்டுக் கொண்டவர்கள். நிலைமை இன்னும் மோசமாவதற்கு முன்னர் தாங்கள் பணிபுரிந்த நாடுகளுக்குச் சென்று தப்பிவிட நினைப்பவர்கள். உரிய நேரத்தில் வெளிநாட்டில் கடமைக்குச் சமுகமளிக்காவிடில் வேலை பறிபோய் விடும் என அஞ்சுபவர்கள்.

இவ்வாறு வெளிநாடு செல்லத் துடிப்பவர்களில் அனேகரின் குடும்பங்கள், உறவினர்கள் இங்கே வாழப் போகின்றவர்கள், யுத்த நிலைமையால் அவர்களுக்கு என்ன நடக்கும் என்று எண்ணுவதைவிட, தாம் தப்பிச் சென்று வெளிநாட்டு வேலையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதையே பலரும் நினைக்கிறார்கள்.

இது தமது மண். அழிக்கப்படுபவர்கள் தமது சொந்த மக்கள். கஷ்டங்களை அனுபவிப்பவர்கள் தமது மக்கள். தங்கள் குடும்பத்தினரும், உறவினர்களும்கூட அவர்களில் அடங்குகிறார்கள் என்பதை அவர்கள் உணரவில்லை.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தன என்பது வெறும் பாட்டுக்குத் தான்; ஏட்டுக்குத்தான் பொருத்தம் என அவர்கள் நினைக்கிறார்கள். நாம் வெளிநாடு சென்று உழைத்தால்தானே தமிழ்ப்பகுதிப் பொருளாதாரத்தை ஓரளவுக்கேனும் பிடித்து வைத்திருக்க முடியும் என்று அவாகள் வாதம் செய்வார்கள் என்பது திண்ணம்.

ஆனால் சொந்த மக்கள் இங்கே அழிந்து கொண்டிருக்க, தனது குடும்ப அங்கத்தவர்களின் உயிர்ப்பாதுகாப்பே நிச்சயம் இல்லாது இருக்கும்போது தனது சொந்த மண்ணை விட்டு ஓடிப்போக நினைப்பவர்களை இந்த மண்ணின் பிரசைகள் என்று சொல்வது பொருந்தாது!

இங்கு உயிருக்குப் போராடிக்கொண்டிருப்பவர்களும், உணவுக்கு வழியின்றிக் கிடப்பவர்களும் அவலப்பட்டுச் சீரழிந்து தவிக்கும் போது, வெளிநாட்டு வேலைக்குச் செல்வோரை கொழும்புக்கு அனுப்புவதற்குச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் முயற்சி மேற்கொண்டதாக வெளிவந்த தகவல் கவலைக்குரியது; கண்டிக்கப்படவேண்டியது

உயிருக்கும், உணவுக்கும் போராடும் மக்களுக்கு, அகதிகளுக்கு உதவுவதற்கே செஞ்சிலுவைச் சங்கம் முதலிடம், முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஒரு சில தனிப்பட்டவர்களின் உந்துதலால் பிறகாரியங்களைத் தனது தோளில் நனைத்துச் சுமக்கக்கூடாது எனக் கேட்டுக் கொள்கிறோம். வேண்டாத அலுவல்களில் தன்னைச் சம்பந்தப்படுத்தி, தனது கீர்த்தியை இழந்துவிடக்கூடாது என விரும்புகிறோம்.

மன்னாரில்

கொழும்பு ஜூலை 2 மன்னாரில் மக்கள் உணவுப் பொருள்கள் மற்றும் மண்ணெண்ணை போன்றவற்றுக்கு மிகவும் கஷ்டப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிராமங்களில் உள்ள சிறிய கடைகளை நோக்கி எரிபொருளை வாங்க மக்கள் படையெடுத்துச் செல்கின்றனர்.

மன்னாரில் கடைகள் மூடப்பட்டுக் கிடக்கின்றன.

மன்னாரில் இருந்து கொழும்பு சென்ற மதகுரு ஒருவர்கொழும்புப் பத்திரிகைக்குமேற்கண்ட தகவலைக் கொடுத்தார். (இ-எ)

ஆனையிறவு 2 மணி நேரம்

கிளிநொச்சி, ஜூலை 2 ஆனையிறவு இராணுவ முகாமின் முன்னால் உள்ள கண்டி வீதி மதியம் 12 மணி முதல் 2 மணி வரை வாகனப் போக்குவரத்துக்கு மூடப்படுகிறது.

இராணுவத்தினர் மதிய உணவுக்காக செல்வதற்கே இந்த ஏற்பாடு என்று தெரிவிக்கப்படுகிறது

சுன்னாகம் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 2 சுன்னாகம் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை அங்கத்தவர்களை இன்று திங்கட்கிழமை பகல் 2 மணிக்கு சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் கூடுமாறு பிரிவு அத்தியட்சகர் திரு. ப. ஜெயக்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ 3)

89 பேர் தடுத்து வைப்பு

கொழும்பு ஜூலை 2 மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நடத்தப்பட்ட தேடுதலின் போது கைதானவர்களில் 89 பேர் மட்டுமே மேலதிக விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இப்படிக் கொழும்புச் செய்தி ஒன்று நேற்றுத் தெரிவித்தது. (இ-எ)

நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர் மஹர சிறையில் தடுத்து வைப்பு

கொழும்பு, ஜூலை 2 அண்மையில் சந்தேகத்தில் கொழும்பில் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இவர்களை துணை அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமியும் மேல் மாகாண சபை உறுப்பினர் ஆர். ஆர். இராமதாஸும் சென்று பார்வையிட்டனர்.

வடக்கு - கிழக்கு மற்றும் மலையகம் ஆகியபகுதிகளைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களே இப்படிக் கைதானார்கள்.

துணை அமைச்சரின் தலையீட்டைத் தொடர்ந்து அன்றைய தினமே இவர்களில் 14 பேர் விடுவிக்கப்பட்டனர்.

ஏற்கனவே 22 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

எஞ்சியோரையும் விடுவிக்கக்கோரி பாதுகாப்புத்துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவுடன் பேச்சுக்கள் நடத்தவிருப்பதாகத் திரு. செல்லச்சாமி தெவித்தார். (இ-எ)

தடை முகாம் மூடப்படுகிறது

இதே வேளை இந்த வழியால் அடையாளக் கார்ட் இல்லாமல் பிரயாணம் செய்பவர்கள் தடுத்து வைத்து விசாரிக்கப்படுகிறார்கள்.

இளைஞர்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்

தடை முகாமில் பணிபுரிந்த பொலிசார் எவரையும் அங்கு தற்போது காண முடியவில்லை. (இ-76)

ஆசிரமத்தில் அகதிகள்

பருத்தித்துறை, ஜூலை 2 மயிலிட்டி, பலாலிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகளில் 32 பேர் ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாசிரமத்தில் புகலிடம் பெற்றுள்ளனர்.

அவர்களுடன் வந்த மற்றும் பலர் தமது உறவினர்களின் வீடுகளில் தங்கியிருக்கிறார்கள். (அ)

அலுவலகம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 2 யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாச அலுவலகம் ஸ்ரான்லி வீதியிலிருந்து நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவு சங்க தலைமைக் காரியாலய கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது

சமாசத்தின் சகல ஊழியர்களும், திணைக்கள உத்தியோகத்தர்களும் புதிய முகவரிக்கு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளனர். [அ 9]

கிழக்கில் தொடரும் தேடுதல்

கொழும்பு. ஜூலை 2 கிழக்கு மாகாணத்தில் வீடு வீடாக நடத்தப்படும் தேடுதல்வேட்டை தொடர்கிறது.

விசேஷ அதிரடிப்படையினருடன் ஆயுதபாணிகளான இராணுவத்தினர் மட்டக்களப்பில் இருந்து அம்பாறை வரையிலான கரையோரப் பிரதேச நகரங்களிலும் தேடுதல் நடத்தி வருகின்றனர் என்று ஏஜென்சிச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-எ)

மாந்தீவுக்கும் படைகள்?

கொழும்பு, ஜூலை 2 மட்டக்களப்பில் மாந்தீவுக்கும் அரசு படையினர் அனுப்பப்பட்டனர்.

மட்டக்களப்பு நகரில் மின்சாரம், குழாய் நீர் விநியோகம் இல்லை.

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவத்தினர் நிலாவெளி வரை சென்று முகாமிட்டுள்ளனர்.

ஈ.பி.ஆர்.எல் எப், ஈ.என்.டி. எல். எப் தரப்பினர் இராணுவத்துக்கு உதவி வருகின்றனர்.

கொழும்பு - திருகோணமலை வீதி திறந்து விடப்பட்டுள்ளது.

— இப்படி கொழும்பில் இருந்து பிரசுரமாகும் சண்டே ஐலண்ட் நேற்றுச் செய்தி வெளியிட்டது. (இ-எ)

கல்முனை: பெண்கள் ஊர்வலம்

கொழும்பு, ஜூலை 2 இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் இளைஞர்களை விடுவிக்கக்கோரி கல்முனை நகரில் தாய்மார்கள் மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள். சனிக்கிழமை இந்த ஊர்வலம் நடந்தது. (இ-எ)

பொலீஸ் நிலையம் முன்னாலேயே குண்டர்கள் பஸ்ஸில் ஏறித்தாக்கு:

கொழும்பில் இருந்து 6 பஸ்களில் புறப்பட்டோருக்கு ஏற்பட்ட பயங்கரம்

யாழ்ப்பாணம், ஜூலை 2 அனுராதபுரம் பொலீஸ் நிலையம் முன்பாக எமது பஸ்கள் நின்றதும் எமது பஸ்களுக்குக் காவலாக வந்த பொலீஸார் பொலீஸ் நிலையத்துக்குள் சென்றனர் அப்போது குண்டர்கள் எமது பஸ்களுக்குள் ஏறினார்கள். பஸ்களில் இருந்தவர்களை கற்களால் தாக்கி, பயமுறுத்தல் வார்த்தைகளைப் பாவித்துக் கூச்சலிட்டனர்.

கொழும்பில் இருந்து பொலீஸ் பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் புறப்பட்ட இளைஞர் ஒருவர் தமது அனுபவத்தை இப்படி விவரிக்கிறார்.

அந்த இளைஞன் தெரிவித்ததாவது.

28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 30 மணிக்கு கொழும்பிலிருந்து 270 பேர் இலங்கை போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த ஆறு பஸ்களில வவுனியா நோக்கிப் புறப்பட்டோம்.

இவ்பஸ்களின் தொடருக்குப பாதுகாப்பாக நாற்பது பொலீஸார் வந்தனர். பஸ்கள் மதவாச்சி வந்தடைந்ததும் குண்டர்கள் கத்திகள், கற்கள் சகிதம் பஸ்ஸில் ஏற முயன்றனர். வெகு சிரமத்தின் மத்தியில் பொலீஸார் அவர்களைத் தடுத்தனர்.

வவுனியாவில் சண்டை நடப்பதால் அங்கு செல்ல முடியாது திரும்பி அனுராதபுரம் போகும்படி ஓர் படை அதிகாரி உத்தரவிட்டார்.

மீண்டும் அனுராதபுரத்துக்கு

மீண்டும் எங்கள் பஸ்கள் அனுராதபுரம் சென்றன. பொலீஸ் நிலையம் முன்பாக பஸ்கள் நிறுத்தப்பட்டன. பஸ்களில் வந்த பொலீஸார் இறங்கிப் பொலீஸ் நிலையத்துக்குள் சென்றனர்.

அப்போது மீண்டும் குண்டர்கள் கற்கள் சகிதம் பஸ்களில் ஏறி ஆண்கள் பெண்கள் எல்லோரையும் கற்களால் தாக்கினார்கள்.சிலர் 'தமிழர்களின் இரத்தம் குடிப்போம்'' எனக் கூச்சலிட்டனர்.

இதனைக் கேட்ட பொலீஸார் திரும்ப வந்து அவர்களை பஸ்சிலிருந்து இறக்கி விட்டு எங்களை அனுராதபுரம் விவேகானந்த வித்தியாலயத்தில் இரவு தங்க ஒழுங்கு செய்தனர்

எமது பஸ்கள் அங்கிருந்து காலை 10 மணிக்குப் புறப்பட்டு மதவாச்சி படைமுகாம் முன் வந்து சேர்ந்தன. பஸ்களில் இருந்த பொலீசார் படைமுகாமுக்குள் சென்றனர் குண்டர்கள் மீண்டும் வந்து எங்களைத் தாக்கினார்கள். அப்போது பொலீசார் வந்து குண்டர்களை இறங்கச் செய்தனர்.

படை அதிகாரி ஒருவர் திடீரென வந்து வவுனியா, மன்னார் செல்பவர்கள் மாத்திரம் வவுனியா செல்ல அனுமதிக்கப்படுவார்கள் யாழ்ப்பாணம் செல்பவர்கள் திரும்பவும் அனுராதபுரம், செல்ல வேண்டுமென உத்தரவு பிறப்பித்தார் என்னிடம் அடையாளக் கார்ட் இல்லாத போதிலும் எப்படியாவது வவுனியா வரையாவது போவதென்று முடிவு செய்தேன்.

வவுனியாவரை செல்பவர் இரு பஸ்களில் ஏற்றப்பட்டனர். நானும் இன்னும் ஒருவரும் இளைஞர்களாக இருந்தோம். இருவருக்கும் துவக்குப் பின் பகுதியால் அடி விழுந்தது ஒருவாறு சமாளித்துக் கொண்டு பஸ்ஸின் உட் பகுதிக்குள் சென்றோம்

அந்த இரண்டு பஸ்களும் வவுனியா புறப்பட மற்றும் மூன்று பஸ்களையும் திரும்ப அனுராதபுரம் அனுப்பினார்.

என்னுடன் [illegible] பிரயாணிகள் மாத்திரம் வவுனியா புறப்ப[illegible] பெரியகுளம் படைமுகாம் அருகில் பஸ் நிறுத்தப்பட்டது. அங்கிருந்த படை அதிகாரி எங்கள் முன் வந்து நீங்கள் வவுனியாவரை மட்டும் போகலாம் என்றார். பிரயாணிகளின் வேண்டுகோளின்படி சடசிவவுனியாப் படை ''சென்றி'' நிலையில் எங்களை அவர் இறக்கி விட்டார். பஸ்கள் திரும்பிச் சென்றன.

வவுனியா சுடுகாடு போல்

வவுனியா நகரம் சுடுகாடு போல் காட்சி அளிக்கது. வீதி ஓரங்களில் பிணங்கள் ரயர்போட்டு எரிவதைக் காணக் கூடியதாக இருந்தது எலும்புக் கூடுகளும் தென்பட்டன.

வவுனியவிலிருந்து நாங்கள் நடந்து ஓமந்தை வந்து சேர்ந்தோம். அங்கிருந்து லொறி மூலம் தலா 150/- கொடுத்து யாழ்ப்பாணம் புறப்பட்டோம்.

லொறி நழுவியது

லொறி சங்குப்பிட்டி வந்ததும் தாம்போதிக்கு பெற்றோல் இல்லை எனக் கூறினார்கள் இதைச் சாட்டாக வைத்து நள்ளிரவில் எங்களை இறக்கி விட்டு லொறி புறப்பட்டது

நாங்கள் அனாதரவாக சங்குப்பிட்டியில் நின்ற சமயம் விடுதலைப் புலிகளின் வாகனம் அவ்விடம் வந்தது.

அவர்களிடம் எங்கள் நிலையைச் சொன்னதும் அவர்கள் லொறியைத் துரத்தி சென்று திரும்ப லொறியுடன் வந்தனர்.

தாம்போதிக்கும் பெற்றோல் ஒழுங்கு செய்து தந்தனர். பிரயாணிகளை நல்லூர், கொக்குவில், சுன்னாகம் ஆகிய இடங்களில்இறக்கி விடும்படி பணித்துச் சென்றனர்.

நான் அதிகாலை மூன்று மணிக்கு கொக்குவிலில் இறங்கி வீடு சென்றேன். இப்[illegible] (இ-18)

அ. தி. மு. க. கண்டனம்

சென்னை, ஜூலை 2 இலங்கைத் தமிழர் மீது இலங்கைப் படைகள் விமானத் தாக்குதல் நடத்துவதை நிறுத்துவதற்கு இந்திய மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்காததை அ. தி. மு. க. நேற்றுக் கண்டித்தது.

இது சம்பந்தமாக அ. தி. மு. க. நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தது. அந்த அறிக்கையில் திரு. எஸ். மாதவன், திரு. கே. காளிமுத்து, முன்னாள் துணை சபாநாயகர் திரு. எஸ். தம்பித்துரை ஆகியோர் கையெழுத்திட்டிருந்தனர். (ஒ-எ)

புங்குடுதீவு

ப. நோ. கூ. சங்கக் கிளையில் 3ஆவது தடவையாக திருட்டு

புங்குடுதீவு, ஜூலை 2 புங்குடுதீவு இரண்டாம் வட்டாரத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக்கிளை கடந்த செவ்வாய்க்கிழமை திருடர்களின் கைவரிசைக்கு இலக்கானது.

கிளையின் கூரைவழியே உட்சென்ற திருடர்கள் அங்கிருந்த பால்மா வகைகள், சீனி, அரசி போன்ற தட்டுப்பாடான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளார்கள்

திருட்டுப்போன பொருள்களின் பெறுமதி ரூபா 4000 என சங்கத்தின் கணக்குப் பகுதி தெரிவித்துள்ளது.

மேற்படி கிளையில் கடந்த இரண்டு மாதங்களுக்குள் இடம்பெற்ற மூன்றாவது திருட்டு இதுவாகும்.

இக்கிளையை பாதுகாப்பான இடமொன்றில் விரைவில் இயங்க வைப்பது குறித்து சங்க நிர்வாக சபையினர் ஆராய்ந்து வருகின்றனர். (ஒ-131)

இலங்கையின் இன்றைய நெருக்கடி:

இந்தியா ஒதுங்கி இருப்பது தான் சிறந்த வழி என்கிறார் குஜ்ரால்

ஹைதரபாத், ஜூலை2 இலங்கையின் இன்றைய நெருக்கடியில் ஒதுங்கியிருப்பதே இந்தியாவுக்கு உள்ள சிறந்த வழியாகும்.

இப்படி இந்திய வெளியுறவு அமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால் தெரிவித்தார்.

ஹைதரபாத் நகரில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் ''இந்திய வெளியுறவுக் கொள்கையும் அதன் எதிர்காலப் பிரதிபலிப்பும்'' என்ற தலைப்பில் திரு. குஜ்ரால் பேசினார்.

அதன் பின்னர் செய்தியாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் முன்கண்ட கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது;

இலங்கையின் ஐக்கியம், இறைமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் இந்தியா அக்கறையாக உள்ளது.

இலங்கையின் பிரிவினைவாத நடவடிக்கைகளுக்கு இந்தியா தனது மண்ணில் இடமளிக்காது.

இலங்கை இனப்பிரச்சினையை பேச்சுக்கள் மூலம் பரஸ்பரம் இருதரப்பினரும் தீர்த்துக்கொள்வதையே இந்தியா விரும்புகின்றது.

இலங்கை அரசும் ஏனையோரும் கடந்தகால வரலாற்று உண்மைகளை இன்னமும் உணர்ந்து கொண்டவர்களாகத் தெரியவில்லை.

இப்படி திரு. குஜ்ரால் தெரிவித்தார். (இ-எ)

மட்டக்களப்பில் ஓரளவு மக்கள் நடமாட்டம்

கொழும்பு, ஜூலை 2 மட்டக்களப்புநகரில் கடந்த சனிக்கிழமை ஓரளவு மக்கள் நடமாட்டம் காணப்பட்டதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

சந்தை சிறிது நேரம் கூடிக் கலைந்தது. பெற்றோல் நிலையத்தில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் திரண்டு நின்று மண்எண்ணெய் வாங்கினார்கள் என்றும் அச் செய்தி தெரிவித்தது. (இ-எ)

கிழக்கு அரச செயலகங்கள்

கிழக்கு மாகாணத்தில் அரசு செயலகங்கள் மீண்டும் இயங்க வேண்டும் என்று பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா உத்தரவிட்டிருக்கின்றார்.

அம்பாறை மாவட்டத்தில் பொலீஸ் நிலையங்களை மீண்டும்திறக்கவும் துணை அமைச்சர் நடவடிக்கை எடுத்திருப்பதாக செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (இ-எ)

இடப்பெயர்ந்த ஊழியருக்கு முற்பணம்

வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்துள்ள அரச ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள முற்பணம் வழங்கப்படுகிறது

அவர்கள் தொழில் பார்க்கும் திணைக்களத்தின் யாழ் பிரிவு அதிகாரியின் சிபார்சுடன் அரச அதிபரைச் சந்தித்தால் 1000ரூபா முற்பணத்தைப் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டது (இ 3)

கிளிநொச்சியில் மோதல்

கிளிநொச்சி ஜூலை 2 கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் பரவிப்பாஞ்சான் ஊடாக வெளியேறமுற்பட்ட போது விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே மோதல் மூண்டது.

இந்தச் சம்பவம் வியாழன் மாலை 6மணி அளவில் இடம் பெற்றது.

இதனைத் தொடர்ந்து இராணுவ முகாமில் இருந்து கிராமங்களை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. (இ-76)

தமிழீழ தேசிய---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்கியுள்ளது.

தேசிய பாதுகாப்பு நிதி என்று கூறிக்கொண்டு சிங்கள இனவாதம் வளர்க்கப்படுகின்றது. சிங்கள தேசம் தமிழீழ மக்களை அழிக்க முயல்கின்றது.

சிங்கள மக்களின் பாதுகாப்பு என்ற பெயரில் சிங்கள தேசமே ஆயுத மயப்படுத்தப்படுகிறது.

தமிழீழத் தேசியபடை பல ஆயிரம்போராளிகளை இன்று கொண்டுள்ளது. இப்படை மேலும் பல மடங்காக உயர வேண்டும் தமிழீழமே தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஆயுதம் ஏந்தவேண்டியகாலம் வந்துவிட்டது.

இன்று தமிழீழம் சிங்கள அரசின் கட்டுப்பாட்டில் இல்லை. குமணையிலிருந்து பருத்தித்துறை வரை எமது போராட்டம் பரந்து நிற்கிறது

படிப்படியாக வளர்ந்து வரும் எமது போராட்டம் முழுமையாக வெற்றிபெற வேண்டுமானால் எமக்கு உடனடியான செயற்திட்டங்களும், நீண்ட கால அடிப்படையிலான செயற்திட்டங்களும் அவசியம்

இப்படியான திட்டங்களைச் செயற்படுத்த எமக்கு பெருமளவிலான மக்களின் பங்களிப்பும் நிதியும் தேவைப்படுகிறது.

சளைத்து விடக்கூடாது

முன்பு போராட்டக் கால நெருக்கடிகளை ஒரு மாவட்டத்தில் அல்லது ஒரு சிறிய பகுதியில் மட்டுமே நாம் பெருமளவில் சந்தித்திருக்கிறோம். இன்று தமிழீழம் முழுவதுமே நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கிறது.

ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாகியுள்ளனர்.

போராட்டம் கூர்மை அடைய, அடைய நெருக்கடிகளும் கூடும். இது கண்டு யாரும் சளைத்துவிடக் கூடாது.

இன்றைய மிக நெருக்கடியான காலகட்டத்தில் தமிழீழ தேசியப் படையான விடுதலைப் புலிகள் தமது ஆட்பலத்தை, ஆயுத பலத்தைப் பெருக்க வேண்டும். இதற்கு நாம் முன்பு கூறியது போல பெருமளவு நிதி தேவைப்படுகிறது.

எனவே நாம் எமது திட்டத்தின் முதற்கட்டமாக மீளச் செலுத்தும் கடன் திட்டதின் அடிப்படையில் தமிழீழ மீட்பு நிதிக்காக ஒவ்வொரு குடும்பத்தினரிடமிருந்தும் குறைந்தது இரண்டு பவுண் தங்கத்தை சேகரிக்க முடிவு செய்துள்ளோம்.

1.7.1990 முதல் இத்திட்டம் செயல் முறைக்கு வருகிறது.

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

நாங்கள் முதலாம் திகதி முதல், தமிழீழ மக்கள் அனைவரையும் பகுதி பகுதியாக சந்தித்து கலந்துரையாடுவோம். அப்போது உங்களிடம் ஒரு படிவம் நிரப்பத் தரப்படும். அப்படிவத்தை அன்றே நீங்கள் நிரப்பித் தந்ததும் எந்த வகையில், எப்போது நீங்கள் உங்களது தமிழீழ மீட்பு நிதிக்கான தங்கத்தைத் தரவேண்டும் என்ற விளக்கம் அளிக்கப்படும்.

இக்கலந்துரையாடல்களின் போது ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் பொறுப்பு வாய்ந்த குடும்ப உறுப்பினர் ஒருவரை கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கடன் மீளளிப்பு விவரம்:-

1 பெறப்பட்ட நகையின் மாற்றினுடன் (கரட்) இரண்டு மாற்று அதிகமாகவுள்ள புலி அடையாளம் பொறிக்கப்பட்ட தங்கப் பதக்கமாக மீளளிக்கப்படும்.

2. குலுக்கல் மூலம் மாதாந்தம் நூறு கடன் பத்திரதாரருக்கு மீளளிப்பு செய்யப்படும்.

3. பெறப்பட்ட நாளிலிருந்து ஒருமாதத்தின் பின்னர் குலுக்கலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

4 கடன் பத்திரதாரர் இல்லாதவிடத்து மறு உரித்தாளருக்கு வழங்கப்படும்.

தமிழீழ மக்கள் அனைவரும், தமிழீழ தேசிய நிதிக்கு உங்கள் முழுமையான பங்களிப்பைத் தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

— இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-உ)

'பாதை' சேவை ஸ்தம்பிக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 2 பூநகரி - சங்குப்பிட்டி கடற் 'பாதை' சேவை ஸ்தம்பிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் தடடுப்பாடே இதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-10]

புதியதோர் சேவை!
★ குறுகிய காலத்தில் ★
தரமான கலர் பிலிம்
கழுவுவதற்கு

Cosmas Marketing Services

337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,

உதயன்

02 - 7 - 1990 திங்கட்கிழமை

வெளிநாட்டில் உள்ள உங்கள்
உறவினர்களுக்கு
அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக
✶ கடிதங்கள் ✶ பார்சல்கள்
★ தஸ்தாவேஜுக்கள் அனுப்ப

DHL
WORLDWIDE EXPRESS

337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கொழும்பில் கைதானவர்கள்குறித்து

1மாதத்துக்கு ஏதும் கூறமுடியாதாம்!

யாழ்ப்பாணம், ஜூலை 2

கொழும்பில் கைதாவோர் பற்றி ஒரு மாதத்துக்கு எந்த வித பதிலும் கூற முடியாது. இப்படி கைதாகும் தமிழரின் இனத்தவர்களுக்கு படையினர் தெரிவித்திருக்கிறார்களாம்.

கொழும்பில் இதுவரை சுமார் 3,000 தமிழர்கள் கைது செய்யப்பட்டு பல்வேறு பொலீஸ் நிலையங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

தலையாட்டி மூலமே கூடுதலானவர்கள் கைது செய்யப்பட்டதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களின் இனத்தவர்கள் பொலீஸ் நிலையங்களுக்குச் சென்று விசாரிக்கும் போது 'ஒருமாதத்தில் விடுவிப்போம் சில வேளைகளில் அந்தக் கால அவகாசம் மூன்றுமாதங்கள் கூடச் செல்லலாம் எம்மை வந்து கரைச்சல் செய்யாதீர்கள்' என்று பதில் கூறப்படுகிறதாம்.

அதே நேரம் கைது செய்யப்பட்டவர்களின் நாற்பது வயதுக்கு மேற்பட்டோர் குறித்து விசாரித்தால் ஏற்கக் கூடிய ஆதாரங்களைச் சமர்ப்பிக்கும் படியும், ஆகக் குறைந்தது வங்கிக் கணக்கு விவரங்களைச் சமர்ப்பிக்கும் படியும் படையினர் கேட்கிறார்கள் என்று அறியவருகிறது. [அ-3]

வடமராட்சி கிழக்கில் பீரங்கித் தாக்குதல்

ஆனையிறவில் இருந்து ஷெல்

பருத்தித்துறை, ஜூலை 2

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை கடற்படையினர் தரையை நோக்கி பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். வெற்றிலைக்கேணி, மருதங்கேணி, தாளையடி ஆகிய பகுதிகளில் குண்டுள் வந்து வெடித்ததாகத் தெரிகிறது.

மேலும் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்டதாகச் சொல்லப்படும் சில ஷெல்கள் மருதங்கேணிப் பகுதியில் வந்து விழுந்து வெடித்ததாகக் கூறப்பட்டது.

இதேவேளை திருமலையிலிருந்து வள்ளங்கள் மூலம் அகதிகளாக வந்த சுமார் 104 குடும்பங்கள் வெற்றிலைக்கேணி, ஆழியவளை, கட்டைக்காடு, மருதங்கேணி, தாளையடி ஆகிய பகுதிகளிலுள்ள தேவாலயங்கள், பாடசாலைகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கிற்கு அகதிகளாக வருபவர்களுக்கு நிவாரண உதவிகளை உடனுக்குடன் வழங்க வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு.த.சந்திரசேகரம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். (ஒ-118)

பருத்தித்துறையிலும் தாக்கு

பருத்தித்துறை, ஜூலை 2

பருத்தித்துறையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

பருத்தித்துறை வெளிச்ச வீட்டிற்கு நேராக நங்கூரமிட்டிருந்த கடற்படையினரின் பீரங்கிக் கப்பல்கடற்கரையை நோக்கி சுமார் அரை மணி நேரம் தாக்குதல்களை மேற்கொண்டது.

அவ்வாறு மேற்கொண்ட தாக்குதலில் பருத்தித்துறை முனைப் பகுதியைச் சேர்ந்த திரு. பற்றா பெர்னாண்டோ றெஜி(வயது 22)என்பவர் படுகாயமுற்றார். (ஒ-118)

கொழும்பு நகரத்தில் வாகனங்கள் கடும் சோதனை

யாழ்ப்பாணம், ஜூலை 2

கொழும்பில் கேந்திர நிலையங்களில் படையினர் வாகனங்களைமறித்துச் சோதனையிடுவதாக அங்கிருந்து வருபவர்கள் தெரிவித்தனர். இச் சோதனைகள் கடந்த வாரத் தொடக்கத்திலேயே ஆரம்பிக்கப் பட்டுவிட்டதாம்.

விடுதலைப் புலிகள் கொழும்பு நகரில் வாகனங்களில் திரிவதாக கிடைத்த தகவலை அடுத்தே முப்படையினரும் கேந்திர நிலையங்களில் காவல் புரிகின்றனர் என்று அங்கு தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிள் முதல் பாரிய வாகனங்கள் வரை சகல வாகனங்களையும் மறித்து லைசென்ஸ் முதல் காப்புறுதி அனுமதிப் பத்திரம் வரை கேட்டுச் சோதனையிடுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் தமிழர்கள் மட்டுமன்றி மற்றைய இனத்தவர்களும் பதற்ற நிலையில் வாழ்வதாக தெரிவிக்கப்பட்டது. (அ-3)

வீட்டைப் பார்க்க சென்றோர் மீது சூடு:இருவர் உயிரிழப்பு!

இராணுவ நடவடிக்கையை அடுத்து வவுனியா, பூந்தோட்டம் பகுதியிலிருந்து வெளியேறி இருந்த சிலர் மீண்டும் வீடுகளைப் பார்க்கச் சென்றனர்.

அப்போது அவர்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

சூடுபட்ட இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்துவிட்டனர். அந்த இருவரின் சடலங்களும் அவ்விடத்திலேயே கிடப்பதாகத் தெரிய வந்தது.

கடந்த புதன்கிழமைநடந்த இச் சம்பவத்தில் உயிரிழந்த அந்த இருவரதும் பெயர் விவரங்கள் தெரியவரவில்லை.

பூந்தோட்டம் பகுதியில்பல வீடுகள் எரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்தது. [ஒ]

மாவட்ட அடிப்படையில் படைகளுக்கு ஆட்சேர்ப்பு

கொழும்பு, ஜூலை 2

ஆயுதப்படைகளுக்கு மாவட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடத்துவது என்றுபாதுகாப்புச்சபை முடிவு செய்து உள்ளது.

இதுவரை காலமும் ஆயுதப் படைகளுக்கு ஆட்சேர்ப்பு இராணுவத் தலைமைக்காரியாலயத்தின் மூலமே இடம் பெற்று வந்தது என்பது தெரிந்ததே. (ஒ-எ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 02-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது;

அதிர்ச்சியால் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

சுன்னாகம் பகுதியில் இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதல்களினாலும், பலாலி முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகளின் சத்தத்தினாலும் அதிர்ச்சியடைந்த நிலையில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பெண்மணி ஒருவர் நேற்று மரணமானார்.

சுன்னாகம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த எஸ். அன்னபூரணம் (வயது 38) என்பவரே மரணமானவராவர். (உ-10)

பல்கலை மாணவருக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 2

தற்போதைய நெருக்கடி நிலை காரணமாக தமது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாதுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் பெயர்களை கலைப் பீட மாணவர் ஒன்றியத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

கொக்குவில் இந்து மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 2

வெளி மாவட்டங்களிலிருந்து இடம்பெயர்ந்து வந்து கொண்டிருக்கும் அகதிகளுக்கு நிவாரணமாக வழங்கும் பொருட்டு உணவுப் பொருள்கள் மற்றும் புடவைகளை சேகரிப்பதற்கு கொக்குவில் இந்துக் கல்லூரி ''இன்ரறக்ட்'' கழக உறுப்பினர்களும், மாணவர்களும் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

அதன் பொருட்டு கல்லூரியின் ''இன்ரறக்ட்'' உறுப்பினர்களையும், ஏனைய மாணவர்களையும் இன்று திங்கட்கிழமை காலை கல்லூரிக்குச் சமுகமளித்து அதிபர் திரு. ஏ. பஞ்சலிங்கத்தைச் சந்திக்குமாறு யாழ்ப்பாணம் ரோட்டரிக் கழகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ)

பொருள்களை அகற்றினர்

குருநகர், ஜூலை 2

நேற்று யாழ்நகரில் நிலவிய அசாதாரண அமைதியைத் தொடர்ந்து குருநகர் பகுதியைச் சேர்ந்த சிலர் வீடுகளில் இருக்கும் பெறுமதி வாய்ந்த பொருள்களை வேறிடங்களுக்கு எடுத்துச் செல்வதைக் காணமுடிந்தது [அ-51]

இந்திய இராணுவத்தின் புதிய தளபதி

புதுடில்லி, ஜூலை 2

இந்திய இராணுவத்தின் பதினான்காவது தளபதியாக ஜெனரல் பிரான்ஸிஸ் ரொட்ரிக்கஸ் நேற்று பதவி ஏற்றுக் கொண்டார்.

இவர் மூன்றாண்டுகளுக்கு குப்பதவியை வகிப்பார். (உ-எ)

மோதல் இல்லையாம்

கொழும்பு, ஜூலை 2

நேற்று நண்பகலுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்தில் வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கும், அரசுப் படையினருக்கும் இடையே பெரிய மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லை.

இப்படி பாதுகாப்பமைச்சு வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

பொம்மர் நோட்டம்

புங்குடுதீவு ஜூலை 2

கடந்த வெள்ளிக்கிழமை மாலை சுமார் 5 மணியளவில் புங்குடுதீவின் கேரதீவுப்பகுதியை பொம்மர் ஒன்று வட்டமிட்டுச் சென்றது.

புங்குடுதீவின் வட மேற்குக் கடற்பிரதேசத்தை நோட்டம் விட்ட பிரஸ்தாப பொம்மர் திடீரென கேரதீவுப் பகுதிக்கு மேல் மிகவும் தாழப்பறந்து மூன்று முறை வட்டமிட்டுச் சென்றது.

புங்குடுதீவுப் பகுதியில் இத்துடன் இரண்டு தடவைகள் பொம்மர் நோட்டமிட்டுச் சென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-131)

இனப் படுகொலையை நிறுத்த உடன் நடவடிக்கை எடுக்குக!

அ. தி. மு. க. எம். பிக்கள் சிங்குக்கு தந்தி

சென்னை, ஜூலை 2

இலங்கையில் இடம்பெறும் இனப்படுகொலையை நிறுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கும்படி அ.தி.மு. கவின் பதினைந்து எம். பிக்கள் பிரதமர் வி. பி. சிங்கைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இந்தஎம். பிக்கள் கூட்டாக நேற்று பிரதமருக்கு இது தொடர்பாக தந்தி ஒன்றை அனுப்பிவைத்தனர். [எ]

வடபகுதி--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருவதற்காக அவர் முயற்சித்தார்.

முல்லைத்தீவுக்கு அவர் வந்துகொண்டிருந்த போது காட்டுப்பாதையில் மறைந்திருந்த படையினர் திடீரென அவரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனராம்.

வேட்டுகள் தீர்க்கப்பட்டதைக் கண்ட அவர் மோட்டார் சைக்கிளை விட்டு கீழே பாய்ந்தார்.

பின்னர் எழுந்துநின்று கைகள் இரண்டையும் மேலே தூக்கியவாறு படையினரை நோக்கி நடந்து சென்றார்.

அவரை அருகில் இருந்த முகாமுக்கு கூட்டிச் சென்ற படையினர், அங்கு அவரை கடுமையாகச் சோதனையிட்டனர்.

பின்னர் உயரதிகாரிகளினால் அவர் மூன்று மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

அதன் பின்பே அவர் யாழ்ப்பாணம் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் வந்த அவர் இங்கு நிலைமைகளை நேரில் அவதானித்த பின்னர் இன்று தனது மோட்டார் சைக்கிளிலேயே கொழும்பு திரும்புவார் என் எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த குழுவினர் பட்டபாடு!

இதே வேளை-- ''ரொய்ட்டார்'' ''டைம்ஸ்'' ஆகிய செய்தி நிறுவனங்களின் பிரதிநிதிகளும் நேற்று யாழ்ப்பாணத்தில் காணப்பட்டனர்.

இவர்கள் வந்த வானின் எல்லாப் புறத்திலும் (மேற்புறம் உட்பட) ''PRESS'' (பத்திரிகை)எனஆங்கிலத்தில் பெரிய எழுத்துகளில் எழுதப்பட்டிருந்தது.

அப்படி எழுதப்பட்டிருந்த போதும் வழியில் இரண்டு தடவைகள் ஓமந்தையில் வைத்து தங்கள் வான் மீது ஹெலியிலிருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அந்த வானில் வந்த பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மயிரிழையில் தாங்கள் உயிர் பிழைத்ததாகவும் --

இதனால் இரண்டு தடவைகளும் வழியில் தமது பயணத்தைக் கைவிட்டு கொழும்பு திரும்பவேண்டி ஏற்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சிடம் ஒவ்வொரு முறையும் இதுபற்றி முறையிட்ட பின்னரே தாங்கள் பயணத்தை மீண்டும் ஆரம்பித்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர். (அ-உ)

டாக்டர்கள்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திய அதிகாரி டாக்டர் சண்முகநாதனும், டாக்டர் இலங்கை நாராயணனும்புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிக்கும்-

சுகாதார மருத்துவ அதிகாரி திருமதி சுந்தரலிங்கம் உதவி டாக்டர்கள் திருமதி மகாலிங்கம், திருமதி சண்முகலிங்கம் ஆகியோர் முளியவளை ஆஸ்பத்திரிக்கும்-

டாக்டர்கள் எஸ். செந்திகாந்தன்,கே. கே. இளங்கோ, உதவி டாக்டர்கள் சண்முகநாதன், குகதேவி ஆகியோர் புளியங்குள ஆஸ்பத்திரிக்கும்-

வவுனியா ஆஸ்பத்திரியிலிருந்து டாக்டர் மீரான் முகைதீன் பூவரசங்குளம் ஆஸ்பத்திரிக்கும்-

டாக்டர் எஸ் வி. ஸ்ரீ இராஜேஸ்வரன், டாக்டர் செந்தில்நாதன், உதவி டாக்டர் தியாகராஜா ஆகியோர் நெடுங்கேணி ஆஸ்பத்திரிக்கும் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் தங்கள் பொறுப்புகளை நாளை செவ்வாய்க்கிழமை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும்-

தமக்கு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு கடமைக்குச் செல்வதற்கு போக்குவரத்துக் கஷ்டம் இருந்தால் அருகில் உள்ள செஞ்சிலுவைச் சங்க [illegible] என்றும் சுகாதார அத்தியட்சகர் தெரிவித்தார். [உ]

நாடாளுமன்றை-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வது:-

16 ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் காணப்பட்ட யுத்த நிறுத்த இணக்கத்தை கைக்கொள்ளுமாறு ஜனாதிபதியை நாங்கள் கேட்டிருந்தோம். ஆனால் எமது கோரிக்கைக்கு அவர் செவி சாய்க்கவில்லை.

தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் தொடுக்கப்பட்டு அவர்கள் மீது போர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தும் இந்தச் சூழ் நிலையில்-

வடக்கு, கிழக்கு மக்களுக்கு உணவு, மருந்து போன்ற அத்தியாவசிய பொருள்களை அனுப்பாது அவர்கள் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருக்கும் இத்தகைய நிலையில்-

தன் நாட்டு மக்கள் மீதே ஓர் அரசாங்கம் இத்தகைய கெடுபிடிகளை விதித்திருக்கும் போது-

நாம் வெறுமனே கையாலாகாதவர்களாக நாடாளுமன்றத்தில் பார்வையாளர்களாக விவதாங்களில் கலந்துகொள்வதில் அர்த்தமில்லை என்று நினைக்கிறோம்.

அமைதியைத் திரும்பவும் ஏற்படுத்தி,சகஜ நிலைமையை கொண்டுவர சம்பந்தப்பட்ட தரப்பினருடன் உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பியுங்கள்.

-இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

சிகரெட் - சாராயம் இருக்கிறதா?

என்று கேட்டு படையினர் தாக்கினர்

வாகனத் தொடரில் வந்தவர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 2

மதவாச்சியிலிருந்து எமது வாகனத் தொடர் செட்டிக்குளம் நோக்கி வந்துகொண்டிருந்த சமயம் செட்டிக்குளத்துக்கும் மதவாச்சிக்கும் இடையில் உள்ள சிறிய இராணுவ முகாம் ஒன்றில் எமது வாகனத் தொடர் தடுத்து நிறுத்தப்பட்டது. சிகரட் இருக்கிறதா? சாராயம் இருக்கிறதா? பற்றறி இருக்கிறதா? என்று கேட்டு இராணுவத்தினர் எம்மைத் தாக்கினர்.

சனிக்கிழமை காலை கொழும்பில் இருந்து புறப்பட்ட வாகனத் தொடரில் பயணம் செய்த யாழ்ப்பாணம் தனியார் கல்வி நிலையம் ஒன்றின் உரிமையாளர் திரு. ரி. ஞானசிலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராணுவத்தினர் தாக்குதலினால் அவரின் கையில் காயம் ஏற்பட்டிருந்தது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பில் இருந்து எம்முடன் பாதுகாப்புக்கு வந்த துணை அமைச்சர் திருமதி புலேந்திரன் மற்றும் பொலீஸ்-இராணுவ டிரக்குகள் மதவாச்சியுடன் திரும்பிச் சென்ற பின்னர் நாம் தனித்து விடப்பட்டோம். நாம் பயணத்தைத் தொடர்ந்த போது சிங்கள ஊர்காவல் படையினர் ஓர் இடத்தில் எம்மை மறித்து சுமார் 45 நிமிடநேரம் தடுத்து வைத்திருந்தனர். அதன் பின் செட்டிக்குளம் நோக்கிச் செல்லும்போதே வழியில் பிரஸ்தாப இராணுவ முகாமில் தாக்குதல் நடத்தப்பட்டது.

செட்டிக்குளம் இராணுவ முகாமை விலக்கி தமிழ் ஊர் மனை ஒன்றை அடைந்து சனிக்கிழமை இரவு அங்கே தங்கினோம்.

பின்பு நேற்றுக் காலை புறப்பட்டு மடு, பூநகரி, சங்குப்பிட்டி வழியாக நண்பகல் அளவில் யாழ்ப்பாணம் வந்து அடைந்தோம்.

இப்படி அவர் கூறினார். [இ]

பெல் - - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் அமெரிக்காவிலும் சியானா செட்டி குண்டு வீச்சு விமானங்கள் இத்தாலியிலும் தயாரிக்கப்பட்டவை ஆகும்.

ஆறுகுண்டு வீச்சு விமானங்களை அரசு வாங்க இருப்பது பற்றிய செய்தி ஏற்கனவே உதயனில் வெளிவந்தது தெரிந்ததே. [உ-அ]

உணவுப் பொருள்களை.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி

பொருள்களை எடுத்துச் செல்லுமாறு வானொலி மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்தே வவுனியாப் பகுதியில் உள்ள பல நோ. கூ. சங்க ஊழியர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட நாட்களில் பொருள்களை எடுத்து வர, இப்போது சன நடமாட்டமே இல்லாத வவுனியா நகருக்குச் சென்றுள்ளார்கள்.

ஆனால் அவர்களை உணவுக் களஞ்சியத்துக்குப் போக விடாது இராணுவத்தினர் தடுத்து நிறுத்தி, திருப்பி அனுப்பிவிட்டனர்,

இந்த லட்சணத்தில் வடக்கு -கிழக்குப் பகுதிகளுக்கு உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படுவதாக அரசாங்க வானொலி நாளாந்தம் ''கத்துகிறது!''. அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம், ஆணையாளர்கள் என்று அதிகாரிகள் வேறு நியமிக்கப்பட்டு, இயங்குகிறார்கள். [அ]

இந்திய---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டியது என்று இக் குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப் பட்டது.

இலங்கைத் தமிழரின் பாதுகாப்பை உறுதி செய்யவும் இந்திய - இலங்கை உடன்பாட்டை முழுமையாக செயற்படுத்தவும் தக்க நடவடிக்கை எடுக்க இந்திய மத்திய அரசு முன்வர வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றும் இக் குழுக் கூட்டத்தில் நிறை நிறைவேற்றப்பட்டது. (ஒ-எ)

மரண அறிவித்தல்கள்

கதிரவேலு சுந்தராம்பாள்

(இளைப்பாறிய ஆசிரியை)

செட்டியகுறிச்சி பூநகரியைச் சேர்ந்த கதிரவேலு சுந்தராம்பாள் (இளைப்பாறிய ஆசிரியை) 30-6-90 காலமானார். இவர் ஓய்வு பெற்ற A.O கதிரவேலுவின் மனைவியும், ஸ்ரீதரன் (பிரான்ஸ்), சிறிநாதன் (இலங்கை வங்கி, கிளிநொச்சி), ஸ்ரீபாலன், ஸ்ரீமோகன் ஸ்ரீகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும், ஞானம் (மட்டுவில்), தனலெட்சுமி (ஆசிரியை மகாவித்தியாலயம் பூநகரி), திருக்கேதீஸ்வரி ஆகியோரின் மாமியாரும், ஆவார்.

இவரின் இறுதிக் கிரியை 1/7/90 பூநகரி செட்டியகுறிச்சியில் நடைபெற்றது. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:
ஆ. கதிரவேலு (A.O)
செட்டியகுறிச்சி,
பூநகரி.

(C/4782)

வேலாயுதம்பிள்ளை மரியநாயகம்

[விசுவலிங்கம் — மாதகல் விசுவப்பா]

முன்னாள் இ. பொ. ச. சாரதியும், விசுவப்பா என அன்பாக அழைக்கப்படும் வே. மரியநாயகம் காலமானார். இவர் காணிக்கைமுத்து (நல்லபிள்ளை) வின் அன்புக் கணவரும், அன்ரன் [இந்தியா], திருச்செல்வம் [இத்தாலி], ஜஸ்ரின் (மாதகல்), அருள்நாயகம் (இத்தாலி), ஜெகநாதன் [சின்னவன்-மாதகல்], விமலா [பரந்தன்], வைலற் [மாதகல்], ராணி [கட்டைக்காடு] ஆகியோரின் தந்தையும், பரந்தன் திருநாவுக்கரசு (குட்டி), சந்திரன்-ராசநாயகம் [கட்டைக்காடு] அ. இருதயம், இ. சாந்தி, ய. சுகுணா, ஜெ. ஐடா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்கு புனித தோமையார் ஆலயத்தில் 3-7-90 நாளை 3 மணியளவில் நடைபெறும் திருப்பலிப்பூசையில் பங்குபற்றி, அன்னாரின் இறுதிச் சடங்கிலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்பாக வேண்டுகின்றோம்.

தகவல் :
ஜஸ்ரின் [மகன்]

பிரதான வீதி,
மாதகல்.

(13489)